Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 252

சனிக்கிழமை 05 ஒகஸ்ட் 2023

ஆடி 20 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



## உணவு நெருக்கடியை எதிர்கொள்ளத் தயார்!

அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக. 5

நாட்டில் உணவு நெருக்கடி ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்ளும் வகையில், கைவிடப்பட்டுள்ள 11 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்களில் மீண்டும் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன »11

தலைமன்னார் - இராமேஸ்வரம்

# மூன்றே மாதத்தில் கப்பல் சேவைகள்!

★ அமைச்சர் நிமால் அறிவிப்பு

★ ரணிலின் இந்தியப் பயண எதிரொலி

மன்னார், ஒகஸ்ட் 5

**தலைமன்னார் மற்றும் இராமேஸ்வரம் இடையிலான கப்பற்சேவை அடுத்த மூன்று மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படும் என்று துறைமுகங்கள் கப்பல் சேவை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்தார்.** »11

## 13ஆவது திருத்தம் பரிந்துரைகள் ஏற்பு

கொழும்பு, ஒக. 5

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பான »12

## எரிவாயு உயராது!

கொழும்பு, ஒக. 5

எரிவாயு விலையில் மாற்றங்கள் செய்யப் »11

விவசாயத்துக்காக

## இளைஞர்களுக்கு அரசின் காணிகள்

கொழும்பு, ஒக. 5

இளைஞர்களை விவசாயத்துறையை நோக்கி ஈர்க்கும் வகையில், அவர்களுக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக அரச காணிகள் வழங்கப்படவுள்ளன என்று விவசாயத்துறையின் இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா அறிவித்துள்ளார். »11

தண்ணீர் இல்லாமல்

## கால்நடைகள் சாகும் நிலை!

கிளிநொச்சி, ஒக. 5

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில், குடிதண்ணீர் இல்லாமல் கால்நடைகள் அலைந்து திரிகின்றன. எனவே தண்ணீரின் இருப்பு மேலும் குறைந்து இறப்புச் »11

## பறாளாய் முருகனுக்காக இருவேறு போராட்டங்கள்

சுழிபுரத்தில் பல்கலை

சங்கானையில் முன்னணி

யாழ்ப்பாணம், ஒக. 5

பறாளாய் முருகன் கோவிலிலுள்ள அரசமரம் சங்கமித்தையால் நடப்பட்டது என்றும், இதனால் அந்தப் பகுதி தொல்பொருள் அடையாளம் »12

## ஆலயம் முன்னே அரசமரம் பின்னே

சரா வலியுறுத்து

விரிவு- பக்.02



கடன் மறுசீரமைப்புத் தொடர்பில்

## மூன்றாந் தரப்பின் கருத்தை செவிமெடுக்கத் தயாரில்லை

ஜனாதிபதி திட்டவட்டம்



கொழும்பு, ஒக. 5

அரச நிதி நிர்வாகம் தொடர்பான அதிகாரம் நாடாளுமன்றத்திடம் மட்டுமே உள்ளது. எனவே, கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் நாடாளுமன்றத்தைத் தவிர்ந்த வேறு எவருடையதும் யோசனைகளையோ நிபந்தனைகளையோ »11

இந்திய நிதியுதவியில்

## யாழ். தீவுப்பகுதிகளில் புதுப்பிக்கத்தக்க மின்!

விரைவில் ஆரம்பம்

கூறுவிலை கோரப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக. 5

யாழ்ப்பாணத்தின் நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு உள்ளிட்ட பகுதியில் புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தியை மேற்கொள்வதற்கு இந்திய அரசாங்கம் »10

## வேலிச்சண்டை வெல்கம!



விரிவு - பக்.10

முல்லைத்தீவில்

## 11,798 ஹெக்ரேயரில் காடுகள் உருவாக்கம்

மக்களின் காணிகள் பறிபோகின்றனவா?

முல்லைத்தீவு, ஒக. 5

முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 ஆயிரத்து 798 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் புதிதாகக் காடுகள் உருவாக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதனால், மக்களின் காணிகள் பறிபோகும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் 70 வீதமான காடுகளுக்கு மேலதிகமாக 5 வீதமாக »12

## அதிகாரத்தை வழங்க அரசாங்கம் தயாராம்!

முல்லை., ஒக. 5

தமிழர்களுக்கு அதிகாரத்தை »09



noolaham.org | aavanaham.org

# முன்பே வந்தது ஆலயம் பின்பே முளைத்தது அரச மரம்



## வரலாற்றைப் புனைந்து வர்த்தமானி மீளப்பெறப்படவேண்டும் என்கிறார் சரவணபவன்

யாழ்ப்பாணம், ஓக. 5

**பறாளாய் முருகன் கோயில் தனியார் கோயில். இந்தக் கோயில் அமைக்கப்பட்ட பின்னர் முளைத்து வந்ததுதான் அரச மரம். அதை நிரூபிக்கப் போதிய ஆதாரங்கள் ஆலய நிர்வாகத்திடம் உண்டு. எனவே சங்கமித்தை நட்ட மரம் என்று வரலாற்றைப் புனையாது வர்த்தமானியை அரசாங்கம் உடனடியாக மீளப்பெறவேண்டும். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.**

பறாளாய் முருகன் கோயிலிலுள்ள அரசமரம் சங்கமித்தையால் நடப்பட்டதாகத் தெரிவித்து தொல்பொருள் திணைக்களத்தால் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பான செய்தி நேற்று முன்தினம் வெளியானதைத் தொடர்ந்து நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், ஆலய தர்மகர்த்தா சபையினருடன் நேற்றுமுன்தினம் பி.ப. 2.30 மணியளவில் நேரில் சென்று கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

கொரோனா பொதுமுடக்க காலத்தில் இராணுவத்தினரும் அவர்களது புலனாய்வுப் பிரிவும் நாங்கள் வீடுகளுக்குள் முடங்கிக்கிடந்த நேரத்தில் இதனை அளவிட்டு தொல்பொருள் திணைக்களத்துக்குப் பரிந்துரைத்திருக்கின்றார்கள். கடந்த பெப்ரவரி மாதம் திகதியிடப்பட்டு வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டாலும் காலம் கடந்தே அது தெரியவந்திருக்கின்றது.

அரசமரத்தை தொல்பொருள் திணைக்களம் சங்கமித்தை நட்டதாக வர்த்தமானியில் பிரசுரித்ததால் பின்னால் கட்டமைக்கப்பட்ட நேர் சீரான நிகழ்ச்சி நிரல் உள்ளது. இது பௌத்தர்களின் பூமி என்பதை அவர்கள் சொல்லுவதற்கும் - நிறுவுவதற்கும் இன்னும் சில ஆண்டுகளே போதும். அவர்கள் எங்கள் பறாளாய் ஆலயத்தை ஆக்கிரமிப்பதற்கான முன்னேற்பாடுதான் இந்த வர்த்தமானி. தமிழர் தாயகத்தை பௌத்த - சிங்கள மயமாக்கும் வேலைத் திட்டத்தை இராணுவம், பொலிஸ், விமானப்படை, கடற்படை என்று ஆயுதம் தாங்கிய படைகளுடன் இணைந்து தொல்பொருள் திணைக்களம், வன வளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை என்று இன்னோரன்ன திணைக்களங்களும் கூட்டுச் சேர்ந்து செயற்படுத்தி வருகின்றன. இலங்கை அரசாங்கத்தின் சிங்கள - பௌத்த கோட்பாட்டை அவர்கள் நிறைவேற்றுவதைத் தடுக்க முடியாத கையறு நிலையில் தமிழர்கள் இருக்கின்றனர்.

ஒரு காலத்தில் முப்படையும் வைத்திருந்தது தமிழினம். அப்போது சப்தநாடியும் அடங்கி ஒடுங்கி இருந்தவர்கள் இன்று நாம் பலமிழந்ததும் எங்கள் முதுகில் ஏறிச் சவாரி செய்ய முற்படுகின்றார்கள். நாங்கள் ஆண்ட இனம். அடிமையாக இருக்கப் பிறந்தவர்கள் அல்லர். எங்களுக்குள்ள வேற்றுமைகளைக் களைந்து அல்லது வேற்றுமையில் ஒற்றுமை கண்டு சிங்கள - பௌத்த மயமாக்கலை - இன வழிப்பை எதிர்க்கவேண்டும்.

இந்த ஆலயம் உருவாக்கப்படும் போது இங்கு அரசமரம் எதுவும் இல்லை. ஆலயம் கட்டப்பட்ட பின்னர் பல ஆண்டுகள் கழித்தே அரச மரம் முளைத்தது என்பதற்கு போதிய சான்றாதாரங்கள் ஆலயத்தினர் வசம் உள்ளன. வர்த்தமானியை அரசாங்கம் மீளப்பெறாவிட்டால், எங்களுக்கு கைக்கு எட்டிய தூரத்தில் இருக்கக் கூடிய நீதிமன்றத்தை நாடுவதுதான் ஒரே வழியாக இருக்கும் - என்றார்.

(ஓ-125)

# சட்டமுறையற்ற ஆர்ப்பாட்டம் சிவாஜிக்கு அழைப்பாணை!

கிளிநொச்சி, ஓக. 5

தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கத்துக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

சட்டமுறையற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்துகொண்டமைக்காகவே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒப்பமிட்டு, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டு குறித்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை வழக்குக்கு சமுகமளிக்குமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ச-ரி2-7)



# மாயமான மோ.சைக்கிள் எரிந்த நிலையில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக.5

காணாமற் போன மோட்டார் சைக்கிளொன்று எரிந்த நிலையில் உரும்பிராயில் நேற்று வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் தனது மோட்டார் சைக்கிள் காணாமற் போனதாக காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் இளைஞர் ஒருவரால் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணையை தீவிரப்படுத்தியிருந்தனர். இந்தநிலையில் எரிந்த நிலையில் மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள் தன்னுடையதென குறித்த இளைஞர் உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(ச-ரி3-125,20)

# மத்திய இராஜாங்க அமைச்சரிடம் மாகாண ஆளுநர் நட்டஈடுகோரல்

## கிழக்கில் சம்பவம்

கொழும்பு, ஓக. 5

சுற்றாடல்துறை இராஜாங்க அமைச்சர் நசீர் அஹமட், 250 மில்லியன் நட்டஈடு செலுத்த வேண்டும் அந்த நட்டஈடு கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்பாடசாலைகளின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தனது சட்டத்தரணி ஊடாக நோட்டிஸ் அனுப்பியுள்ளார்.

இதுதொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர் நசீர் அஹமட், கிழக்கு மாகாண ஆளுநர் தொடர்பில் பொய்யான கருத்துகளையும் அரச தொழில் இடமாற்றங்கள் குறித்து பிழையான தகவல்களையும் பரப்பியுள்ளார்.

காத்தான்குடி வலயக் கல்விப் பணிப்பாளராக தற்காலிக நியமனம் பெற்றிருந்த அதிபர் சேவைத் தரத்தில் இருந்த ஒருவர், அந்தப் பதவிக்கு தகுதியான கல்வி நிர்வாகசேவை அதிகாரிஒருவர்நியமிக்கப்பட்டபின் இடமாற்றம் செய்யப்பட்டார்.

இந்த விடயத்தை அரசியல் ரீதியில் தூக்கிப்பிடித்த அமைச்சர் நசீர் அஹமட், கிழக்கு மாகாண ஆளுநர் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து இந்த இடமாற்றத்தை மேற் கொண்டதாக விமர்சித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் முழுமையாகநிராகரிக்கப்படவேண்டியவை. அதற்கமைய அவர் 25 கோடி ரூபாவை நட்ட ஈடாக செலுத்தவேண்டும். கிழக்கு மாகாண பாடசாலை வளர்ச்சிக்கு அது பயன்படும்.செலுத்தத்தவறின் நசீர் மீது மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றுள்ளது.

(ஓ-இ)

## மின்துண்டிப்பு:

# தீப்பந்த வெளிச்சத்தில் விகாரையில் வழிபாடு

கொழும்பு, ஓக. 5

மிஹிந்தலை ரஜமஹா விகாரைக்கு மின்துண்டிப்புச் செய்யப்பட்டமையால் தீப்பந்தத்தின் உதவியுடனேயே வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்த வழிபாடுகள் இடம்பெற்றன.

குறித்த விகாரையில் 41 லட்சம் ரூபா மின்கட்டணம் செலுத்தப்படாத காரணத்தாலேயே மின்சாரசபை மின் இணைப்பைத் துண்டித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ச-ரி3)

# லொறி — வாகனம் விபத்து; ஐவர் உயிரிழப்பு!



கொழும்பு, ஓக. 5

வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் உயிரிழந்துள்ளனர். இந்தக் கோர விபத்து தம்புத்தேகம - ஈரியகம பகுதியில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்துள்ளது.

குருநாகலில் இருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த லொறியொன்று வீதியோரத்தில் நிற்கத் தயாரானபோது அதே திசையில் அதிக வேகத்துடன் பயணித்த வான் கட்டுப்பாட்டை இழந்து லொறியின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரே விபத்தில் உயிரிழந்துள்ளனர். விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(ச-ரி2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில்

# இரும்பு திருடினரென 20 பேர் கைதாகினர்!



யாழ்ப்பாணம், ஓக. 5

**காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் இரும்புதிருடமுற்பட்டனர்என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் 20 பேர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

சிமெந்துத் தொழிற்சாலைக்குள் அத்துமீறி உள்நுழைந்த 8 பெண்கள் மற்றும் 12 ஆண்களே இவ்வாறு கைதாகினர்.

20 சந்தேகநபர்களுக்கு எதிராகவும் மல்லாகம் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்து முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை ''தொழிற்சாலைக்கு உரிய பாதுகாப்பு இல்லாததால், சுற்றுவட்டாரத்தில் வசிப்பவர்கள் தொழிற்சாலை வளாகத்துக்குள் நுழைந்து இரும்பை எடுத்துச் செல்கின்றனர். வடக்கில் இராணுவத்தினரைக் குறைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் படையினர் அகற்றப்பட்டதால் இந்த நிலை உருவாகியுள்ளது" என இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச-ரி2,27,125)



மீசாலையில்

## பிடிக்கவில்லை 'பிறேக்' இடிபட்டது இ.போ.ச.

கொடிகாமம், ஓக. 5

இ.போ.சபைக்குச் சொந்தமான பேருந்தொன்று பிறேக் செயலிழந்ததால் - வேகக்கட்டுப்பாட்டை இழந்து தனியார் பேருந்தொன்றை இடித்துதள்ளி பின்னர் புத்தூர்ச் சந்தியிலுள்ள பேருந்து தரிப்பிடத்துடன் மோதியுள்ளது. இந்த விபத்துச் சம்பவம் மீசாலை புத்தூர்ச் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பேருந்தின் 'பிறேக்' திடீரெனச் செயலிழந்தது. இதனால் அந்தப் பேருந்து வாழைச்சேனையிலிருந்து பயணித்த தனியார் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. அதனால் நிலைதடுமாறிய தனியார் பேருந்து, பின்னால் பயணித்த டிப்பருடன் மோதியது. விபத்தில் இ.போ.ச. பேருந்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தெய்வாதீனமாக பேருந்துகளில் பயணித்தோர் காயமின்றி தப்பித்தனர். விபத்துத் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-ரி-159,279)

## பரு.வழித்தடத்தில் சாரதிகள் மோதல்!

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வழித்தடத்தில் பயணித்த இ.போ.ச. பஸ் சாரதியும் தனியார் பேருந்துச் சாரதியும் ஒருவர் மீது ஒருவர் மாறிமாறி தாக்குதலை நடத்தியுள்ளனர் . இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நிகழ்ந்துள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப்பயணித்தஇ.போ.ச.பேருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலி நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தும் ஒன்றையொன்று போட்டிபோட்டுப் பயணித்துள்ளன.இதன்போது இ.போ.ச. பேருந்தை தனியார் பேருந்து முந்திச் செல்ல முற்பட்டபோது தனியார் பேருந்தின் கண்ணாடி உடைந்துள்ளது.

இரு பேருந்துகளின் சாரதிகளும் பேருந்துகளை விட்டிறங்கி சென்று ஒருவரை யொருவர் தாக்கிக் கொண்டுள்ளனர் எனத் தெரி விக்கப்படுகிறது. இருவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-ரி2-125)

## சுத்திகரித்த நீர் நிலையங்கள் முல்லையில் 4 இடங்களில்!

### திறந்துவைத்தார் பிரசன்ன

முல்லைதீவு, ஓக. 5

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயற்றிட்டத்தின் கீழ் முல்லைத்தீவில் 4 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்றுமுன்தினம் அவற்றைத் திறந்துவைத்தார்.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கூழாமுறிப்பு, கற்சிலைமடு, காதலியார் சமளங்குளம், ஒலுமடு ஆகிய கிராமங்கள் பயன்பெறும் நோக்கில் இவை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய இந்தத் திட்டத்தின் கீழ் வடக்கில் கிளிநொச்சியில் 23 நனோ சுத்திகரிப்புத் திட்டமும் வவுனியாவில் 23 நனோ சுத்திகரிப்பு குடி தண்ணீர்த் திட்டமும் முல்லைத்தீவில் 4 குடிதண்ணீர்த் திட்டமுமாக 50 நனோ சுத்திகரிப்பு குடிதண்ணீர்த் திட்டங்கள் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்கென 209 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.



நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சின் செயலாளர் , வடமாகாண பிரதம செயலாளர், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (ச-ரி3-19)




இழவு வீட்டுக்குப் போனாலும் பிளவுபட்டு நிக்கிறது எங்கட பரம்பரைக்குணம். ஒருகாரியமும் ஒண்டா நிண்டு ஒப்பேத்த மாட்டம். அதாலதானே இப்பவும் இப்பிடிச் சின்னாபின்னப்பட்டு நிக்கிறம். எந்த நிகழ்வு எண்டாலும், அதில ஆர் தலைப்பா கட்டுறது எண்ட குடுமிப்பிடிச் சண்டை அரசியல்லதான் சகஜம் எண்டு பார்த்தால், இப்ப அந்த வியாதி காணாமல் ஆக்கப்பட்டவையின்ர போராட்டம் வரை கான்சர் போல பரவிப் போட்டுது.

போன வெள்ளிக்கிழமை ஹர்த்தால் வைச்சு, முல்லைத்தீவில ஒரு ஆர்ப்பாட்டமும் நடந்தது எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கும். கொக்கிளாயில தண்ணிப்பைப் போட நிலத்தைக் கிண்டேக்க, அங்க மனிதப் புதைகுழி ஒண்டைக் கண்டுபிடிச்சவை. அதில கிடைச்ச தடயங்களை வைச்சுப் பாக்கேக்க, கடைசிச் சண்டையில காணாமல் ஆக்கப்பட்டவை அதுக்க புதைக்கப்பட்டிருப்பினமோ? எண்ட 'டவுட்' தான் கனபேருக்கு வந்தது. அப்பிடி அதுக்குள்ள காணாமல் ஆக்கப்பட்டவையைப் புதைச்சிருந்தால், அந்தப் புதைகுழி விசயத்தை இப் பிடியே மூடிமறைக்கத்தான் அரசாங்கம் வேலை பாக்குமே தவிர, உண்மையை ஒருக்காலும் வெளியில கொண்டுவராது. அதாலதான் இந்தப் புதைகுழி விசயத்தில சர்வதேசம் தலையிட்டு, கண்காணிச்சு உண்மையை வெளியில கொண்டுவரச் செய்யோணும் எண்டதை வலியுறுத்தத்தான் இந்த ஹர்த்தாலும், ஆர்ப்பாட்டமும் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்திலதான் காணாமல் ஆக்கப்பட்டவையின்ர உறவுகளின் சங்கக்காரர் ரண்டு, மூண்டு தரப்பாப் பிரிஞ்சு நிண்டு 'நீ பெரிசோ? நான் பெரிசோ?' எண்டு அடிபடத் தொடங்கிட்டினம். இந்தக் காணாமல் ஆக்கப்பட்டவையின்ர உறவுகளின் அமைப்பு கொஞ்சக் காலத்துக்கு முதலே ஒவ்வொண்டும் ஒவ்வொருதிசையில தான் போய்க்கொண்டிருந்ததுகள். அரசியல் கட்சியள், வெளிநாட்டுக்காரர் எண்டு ஒவ்வொருத் தரும் இந்த அமைப்புகளை தங்கடை கையுக்க கொண்டுவந்து. அவை விரும்பின மாதிரி ஆட்டுவிக் கினம். அதால முதல்ல தங்கடபாட்டில தொடங்கின இந்தக் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அமைப் புகள் எல்லாம் இப்ப வேறவேற கொள்கையளோட நிக்கிறதைப் பாக்கமுடியுது.

சரி, என்னதான் உள்ளுக்க ஆயிரம் முரண்பாடு இருந்தாலும், அதை அவை தங்களுக்க கதைச்சுப் பேசி தீர்க்கிறதை விட்டிட்டு, ஆர்ப்பாட்டம் நடக்கிற நேரம் நடுறோட்டில வைச்சு பிச்சுப் பிடுங்குப்பட்டிருக் கினம். ஆர் கூட்டத்தில பேசுறது? எந்த அமைப்பின்ர அறிக்கையை வாசிக்கிறது? எண்டு ஆர்ப்பாட்டம் நடக்கேக்கையே இழுபறிப்பட்டால், அவைக்காக ஆர்ப்பாட்டத்துக்குப் போனவைக்கு எப்பிடி இருக்கும்? 'சர்வதேசத்துக்கு கேக்கிற மாதிரி குரல் குடுக்க ஒன்றுபட்டு வாருங்கோ' எண்டு சனத்தைக் கூப்பிட்டுப்போட்டு, இவை தாங்களே இப்பிடி கன்னை பிரிஞ்சுநிண்டு மல்லுக்கட்டி வித்தை காட்டியிருக்கினம். அப்ப மனிதப் புதைகுழியளுக்கு நீதி கிடைக்கவேணும் எண்டதை விடவும், தாங்கள் பேர் எடுக்கத்தான் இப்பிடி ஹர்த்தால் போட்டு, கடையடைச்சு, பேரணி வைச்சவை என் டெல்லோ கதைவரும். அதோட இவை ஆர் பெரிசு எண்டு அடிபடத்தான் ஆர்ப்பாட்டம் வைக்கினம் எண் டிட்டு உணர்வோட போறவையும் போகாமல் விடத் தான் சான்ஸ் கூட. பல எலியள் சேர்ந்தா புத்தெடுக்க ஏலாது எண்டுறது உண்மைதான் போல. இப்பிடி ஆளுக்கொரு திக்கா இழுபட்டு எல்லாத்தையும் போட்டுடைச்சுப் போட்டு, தலையில கையை வைச்சுக் கொண்டு காலம் முழுக்க எங்கட இனம் பிச்சையெடுக்கத்தான் சரி.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஈ-குருவி' நடை யாழில் நாளை

யாழ்ப்பாணம், ஓக. 5

உள்ளூர் உற்பத்திகளை பெறுமதி சேர்க்கையூடாக மதிப்புக் கூட்டும் வகையிலான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் விதைக்க - உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்த 'ஈ-குருவி நடை' சமூக முயற்சியாக ஒழுங் கமைக்கப்பட்டுள்ளது.

இந்த நடைபயணம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் 9.30 மணிவரை இடம்பெற வுள்ளது.

யாழ்ப்பாண பொதுநூலக முன்றிலில் ஆரம்பிக்கும் இந்த நடைபயணம் மருத்துவமனை வீதியூடாக சத்திர சந்தியை அடைந்து அங்கிருந்து கோட்டை சுற்றுவட்ட வீதியூடாக மீண்டும் பொதுநூலகத்தை வந்தடையும்.

நடைபயற்சி மூலம் உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்தி பொருண்மிய மேம்பாட்டை வலுப்படுத்த ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நடைபயணத்தில் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டுக்குழு அறி வித்துள்ளது. (ச-ரி)

# வினாடி வினாப் போட்டி வரணி மத்தி முதலிடம்!

இந்துநாகரிகம் வினாடிவினாப் போட்டியில் மாவட்ட ரீதியில் வரணி மத் திய கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் இந்துநாகரிகத்துறை கற்கைகள்பீடம் மாவட்ட ரீதியில் இந்துநாகரிகம் வினாடி வினாப் போட்டியை நடத்தியது.

அதில் வெற்றியீட்டிய ஐந்து பாடசாலை மாணவர்களுக்கு கடந்த புதன் கிழமை யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இறுதிப் போட்டி நடத்தப்பட்டது.

அதில் யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய வரணி மத்திய கல்லூரி இரண்டு சுற்றுப் போட்டிகளிலும் வென்று முதலாவது இடத்தைப் பிடித்தது.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ், பதக்கம், பணப்பரிசு, பாடசாலை மற்றும் ஆசிரியர் என்போருக்கான விருது விரைவில் வழங் கப்படவுள்ளன. (ச-ரி2-159)

# சாந்தா அபிமன்னசிங்கத்தின் நினைவஞ்சலிக் கூட்டம்

மறைந்த ஜனாதிபதி சட்டத்தரணியும், யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவருமான சாந்தா அபிமன்னசிங்கத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள யு.எஸ். ஹோட்டலில் இடம்பெறவுள் ளது. (ச-ரி-66)

# சிறுவர் கழகங்களிடையே தென்மராட்சியில் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 5

தென்மராட்சியில் சிறுவர் கழகங்களுக் கிடையிலான போட்டிகள் நடத்தப்பட வுள்ளன.

நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப. 1.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பிரதேச மட்டப் போட்டிகளுக்குத் தெரி வான சிறுவர் கழகங்களின் அங்கத்தவர் கள் போட்டிகளில் பங்கேற்குமாறு அறி விக்கப்பட்டுள்ளது. (ச-ரி- 9)

# பிள்ளைப் பாடல்கள் ஒலிப்பேழை வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 5

யானைத் தாத்தா தேவன் பூதனார் என்ற புனைபெயரில் சிறுவர் இலக்கியம் படைத்துவரும் சிரேஷ்ட சட்டத்தரணியும் எழுத்தாளருமான சோ.தேவராஜாவின் 'வானம் எங்கள் வசம்' ஒலிப்பேழை மற் றும் 'சாதனா ஆடுறா' நூல் என்பவற்றின் வெளியீட்டு அரங்கு என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்ற உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது.

புகழ்பெற்ற கலைஞரும் எழுத்தாளருமான வயிரமுத்து திவ்வியராஜன் தலைமையில் இளையோர் பேரவையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் அறிமுகவுரைகளை எழுத்தா ளர் ஸ்ரீலேக்கா பேரின்பகுமார், சிறுவர் இலக்கியச் செயற்பாட்டாளர் கு.பதீதரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

ம.ஆனந்த் இசையமைப்பில் 'வானம் எங்கள் வசப்படும்' இசைப்பா அரங்கும் இடம்பெறவுள்ளது. (ச-ரி)

# பொலிஸ் அதிகாரம் இல்லாவிடினும் 13ஆவது திருத்தத்தை குழப்போம்!

### விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

பொலிஸ் அதிகாரம் வழங்கப்படா ததை ஒரு பிரச்சினையாக மாற்றி 13ஆவது திருத்தத்தைக் குழப்பமாட்டோம் என்று நாடாளு மன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்தப் பட்ட செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ஜனாதி பதி 13ஆவது திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேசப்போகின் றார். அவர் என்ன பேசப்போகின் றார் என்று தெரியவில்லை. பொலிஸ் அதிகாரத்தைத் தவிர்த்து விட்டு 13ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்துவதாகக் கூறலாம். பொலிஸ் அதிகாரத்தை அவர்கள் தவிர்த்தாலும் அதை ஒரு பிரச்சினையாக மாற்றி 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தவிர்க்கப்படும் சந்தர்ப்பத்தை தவிர்க்கப் பார்க்கிறோம்.

மாகாண சபைகளை எவ்வாறு அதி காரம் மிக்கதாக மாற்ற முடியும் என் பது தொடர்பில் கலாநிதி விக்னேஸ்வரனுடன் இணைந்து ஓர் ஆவணத்தை ஜனாதிபதி ரணிலிடம் வழங்கியுள்ளேன். அதை நடைமு றைப்படுத்துவதாக அவர் என்னிடம் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி 13ஆவது திருத்தம் தொடர்பில் நாடா ளுமன்றத்தில் உரையாற்ற முன்வந் தமை நல்லதொரு விடயம். அது அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர்க ளின் நிலைப்பாட்டை நாம் அவதா னிக்க உதவும்.

நீங்கள் 13ஆவது திருத்தத்தை ஏற் றால், சிங்களவர்கள் அதனுடன் நிறுத்திக் கொள்வார்கள். நீங்கள் வேறு ஒன்றையும் கேட்கவில்லை யெனக் கூறுவார்கள் என்று வெளி நாட்டிலுள்ள சிலர் என்னிடம் கோபித்துக் கொண்டார்கள். நான் அதை எதிர்பார்த்ததுதான். அவர்க ளைப்பொறுத்தவரை (சிங்களவர்கள்) மக்களின் பிரச்சினை தீர்ந்துவிட்டது. 13இனைக் கொடுத்துவிட்டோம் என்று சொல்லப் பார்ப்பார்கள். ரணி லும் அவ்வாறு சொன்னால் அது சரியா? பிழையா? என எடுத்துக்கூ றுவது எமது கடமை. நாம் அதைச் செய்வோம் என்றார். (அ-ம)

# நல்லூர்க் கந்தனுக்கு 21 இல் கொடியேற்றம்

### ஏற்பாடுகள் துரிதம்

யாழ்ப்பாணம், ஓக. 5

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாள்கள் திருவிழா பக்திபூர்வ மாக நடைபெறவுள்ளது.

திருவிழாவுக்கான ஏற்பாடுகள் யாவும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆலயச் சுற்றாடலில் துப்புரவுப் பணிகள் மாந கராட்சி மன்றத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச-17)

# முஸ்லிம் மாணவனின் தாடிக்கான தடைக்கு தடைபோட்டது நீதி!

மட்டக்களப்பு, ஓக. 5

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர், தாடி வைத்திருந்ததன் கார ணமாக பரீட்சைகள் எழுதுவதற்கும், விரிவுரைகளில் கலந்துகொள்வதற் கும் பல்கலைக்கழக நிர்வாகம் தடை விதித்திருந்த நிலையில், அந்த மாணவனை பரீட்சை எழுதுவதற்கும் விரிவுரைகளில் பங்கேற்ககும் அனு மதிக்குமாறு மேன்முறையீட்டு நீதி மன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மனுவில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த கிழக்குப் பல்க லைக்கழகத்தின் துணைவேந்தரை செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி நீதி மன்றத்தில் முன்னிலையாகி சாட்சி யம் வழங்குமாறும் நீதிமன்றம் உத்த ரவிட்டுள்ளது. மாணவரின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்த ரணி சாலிய பீரிஸ், சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர் ஒரு முஸ் லிம் என்றும் தாடி என்பது அவரு டைய மத நம்பிக்கை என்றும் முன் வைத்த சமர்ப்பணங்களை அடுத்தே நீதிமன்றம் இந்தக் கட்டளையைப் பிறப்பித்தது. (அ-ம)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெ டுக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**இடபம்:** அனுகூலமான நாள். சகோ தரர்கள் ஆலோசனை கேட்டு வரு வார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும். செலவு கள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்க ளின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். கவனம் தேவை. உற்சா கமாகக் காணப்படுவீர்கள்.

**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பிரச்சினைகள் ஏற்ப டக்கூடும். உறவினர்களால் சில பிரச்சி னைகள் ஏற்படலாம். பாதிப்பு இருக்காது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த பணவரவு உண்டாகும் என்றாலும் எதிலும் பொறு மையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. பொறுமை அவசியம்.

**கன்னி:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாம தமாகும். எதிரிகளால் சில பிரச்சினை கள் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். லாபம் உண்டாகும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடு படவேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். அலைச்சல் ஏற்படும். சங்கடங்கள் ஏற்படும். பொறு மையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். ஏற்பட்டி ருந்த மனவருத்தம் நீங்கி அந்நி யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப் பார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகள் அதி கரித்தாலும் சமாளித்துவிட முடியும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. அனுசரணையாக நடக்கவும்.

**மீனம்:** சிந்தித்துச் செயல்படவேண்டிய நாள். வாழ்க்கைத்துணையுடன் அனு சரித்துச் செல்வது நல்லது. வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம். சற்று சோர்வு உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்க

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச காலத்தில் பிள்ளையார் சுழி போட்டுத் தொடங்கப்பட்ட பௌத்த – சிங்கள ஆக்கிரமிப்பு தற்போது வேகமெடுத்து தமிழர் தாயகத்தைச் சுற்றி வல்வளைப்புச் செய்துள்ளது. தமிழர் தாயகத்தின் எல்லைக் கிராமங்களில் கைவைத்த பௌத்த – சிங்களப் பேரினவாதம் தாயகத்தின் தலையில் – உச்சியில் – மேல் எல்லையில் ஆக்கிரமிப்புக்கான அடித்தளத்தைப் போட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தால் யாழ்ப்பாணத்தில் 4 இடங்கள் புராதன தொல்பொருள் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இளவாலையிலுள்ள தேவாலயம், பருத்தித்துறையிலுள்ள சுங்கக் கட்டடம், கீரிமலையிலுள்ள தீர்த்தக்கேணி மற்றும் சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்திலுள்ள அரச மரம். இவை எல்லாவற்றிலும் நேரடியாக உறுத்தலுக்குரிய ஒன்றாக இருப்பது பறாளாய் முருகன் ஆலய அரச மரம்தான். அந்த அரச மரம் தொடர்பில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கமே, அது உறுத்தலுக்குரியதாக – கவனிப்புக்குரியதாக மாறியதற்குக் காரணம். பறாளாயிலுள்ள அரச மரம் சங்கமித்தை இலங்கைக்கு வந்தபோது நட்டதாக தொல்பொருள் திணைக்களம் புதுக்காரணத்தைக் கற்பிக்கின்றது. ஆனால் அந்த அரசமரத்தின் வயதோ 200 க்கும் குறைவானதே. ஏனெனில் பறாளாய்க் கோயிலை 1700 களில் மீளக் கட்டும்போது இந்த அரசமரம் அங்கிருக்கவில்லை. அப்படியானால் சுமார் இரண்டாயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன்னர் சங்கமித்தை வந்ததாகச் சொல்லப்படும் வரலாறே தலைகீழாகி விடுமே? பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும். ஆனால் அது தொல்லியல் திணைக்களத்துக்கு இன்னும் கைவரவில்லை. அதேபோன்று மகாவம்சத்தை எழுதியோரும் பொய்களை சரிவரப் புனையத் தெரியாமல் மாட்டிக் கொண்டு தவிக்கின்றனர்.

என்னதான் யுனெஸ்கோ அங்கீகரித்தாலும் கூட, இலங்கையின் வரலாற்றைச் சொல்வதாகக் கூறப்படும் மகாவம்சத்தை தமிழ் மக்கள் நம்பவில்லை. அதில் பல விடயங்கள் புனையப்பட்டுள்ளன அல்லது திரிபுபடுத்தி மாற்றி எழுதப்பட்டுள்ளன என்பது ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகளையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தத் திணைக்களம் போருக்குப் பின்னரான காலப் பகுதியில் தமிழர் தாயகத்தில் பௌத்த – சிங்கள ஆக்கிரமிப்பை நிறுவும் ஒரு திணைக்களமாக தன்னை உருமாற்றியே செயற்பட்டு வருகின்றது. தமிழர் தாயகத்தின் எல்லையான வவுனியாவில் வெடுக்குநாறி மலை தொடங்கி முல்லைத்தீவு குருந்தூர்மலை ஈடாக நெடுந்தீவு வெடியரசன் கோட்டை எனப் பல்வேறு இடங்களில் தனது சிங்கள– பௌத்த ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு தொல்பொருள் திணைக்களம் படாதபாடுபடுகின்றது. தொல்பொருள் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்படும் இந்த நிலங்களின் உரித்து அனைத்தும் தொல்பொருள் திணைக்களத்துக்கே உரியது.


கீரிமலை தீர்த்தக்கேணி வலி. வடக்கு பிரதேசசபையின் ஆளுகைக்குரியதாக இதுவரை இருந்து வருவதுடன் அதற்குரிய கட்டண அறவீட்டையும் பிரதேசசபையே மேற்கொள்கின்றது. அதன் அபிவிருத்திப் பணிகளையும் பிரதேசசபையே கவனித்துக்கொள்கின்றது. தொல்பொருள் திணைக்களத்துக்குரியதாக கீரிமலை தீர்த்தக்கேணி மாற்றப்பட்டால் பிரதேசசபையால் அங்கு தலையீடு செய்ய முடியாத நிலைமை ஏற்படும். கட்டண அறவீடும் தொல்பொருள் திணைக்களத்துக்குரியதாக மாற்றப்படும். இந்துக்களின் புனிதத் தலமாக இருக்கின்ற கீரிமலையில் இன்றுவரையில் இந்து அடையாளங்களைத் தவிர்ந்த வேறு எந்தவொரு மத அடையாளங்களும் இல்லை. ஆனால் இதுவே தொல்லியல் திணைக்களத்தின் வசமாகினால் புத்தர் அங்கு வந்து அமரமாட்டார் என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமும் இல்லை. திருகோணமலை கன்னியாய் வெந்நீர் ஊற்றில் இருந்த சிவன் மறைக்கப்பட்டு புத்தர் குடியேற்றப்பட்டதைப்போல கீரிமலையிலும் நடந்தேறினாலும் ஆச்சரியமில்லை. கன்னியாய் வெந்நீர் ஊற்று எப்போது உள்ளூராட்சிமன்றத்திடமிருந்து தொல் பொருள் திணைக்களத்துக்கு கைமாறியதோ அப்போதே பௌத்தத் திணிப்புகளும் அதில் உட்புகுத்தப்பட்டன.

திரும்பும் இடமெல்லாம் தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு ஒருபுறம், முப்படையின் ஆக்கிரமிப்பு மறுபுறம், வனவளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு மற்றொரு புறம், மகாவலி அதிகாரசபையின் ஆக்கிரமிப்பு இன்னொரு புறம் என்று தமிழர் தாயகத்தை விழுங்குவதற்கு எல்லாத்திணைக்களங்களும் பல முனைகளில் கால்பதித்து விட்டன.

ஆனால், தமிழர்களோ இன்னமும் அது தொடர்பில் அக்கறை கொள்ளாமல், வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதிலும், ஒன்றுமே இல்லாத '13 'தொடர்பில் அலட்டிக்கொண்டும், சமூக ஊடகங்களில் மாத்திரம் பொங்கிக்கொண்டும் இருக்கின்றோம். நமது இருப்புக்காக போராடாமல் வாளாவிருந்தால் சிங்கள – பௌத்த பேரினவாதம் இன்னும் இன்னும் ஆக்கிரமிப்பை வலிமைப்படுத்தவே செய்யும்.

### நாளொரு நல்வார்த்தை

"சிந்தனைதான் உன்னைத் தூண்டி வேலை செய்ய வைக்கிற உந்து சக்தி. எனவே உன் மனதை மிக உயர்ந்த சிந்தனைகளால் நிரப்பி விடு" – சுவாமி விவேகானந்தர்



## '13' இல் கிடைப்பதை மட்டும் புசித்துக் கொள்ள முயலுக!



### இராஜாங்க அமைச்சர் சனத் கூறுகிறார்

**வவுனியா, ஓக.5**

**13 ஆவது திருத்தச் சட்டத்தால் கிடைக்காத சின்னச் சின்னப் பிரச்சினைகளை பற்றிக்கொண்டு அரசியல் செய்வதை விடுத்து கிடைத்ததைக்கொண்டு மக்களுக்குச் சேவையாற்ற தமிழ் அரசியல்வாதிகள் முன்வரவேண்டும் என நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த தெரிவித்துள்ளார்.**

வவுனியா தரணிக்குளத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அவர் இதனைக் குறிப்பிட்டார். மேலும் கருத்துத் தெரிவித்த அவர், '13' பற்றிப் பேசிக்கொண்டு வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதியைக் கூட உரியமுறையில் பயன்படுத்தாது திருப்பி அனுப்பும் நிலை ஏற்பட்டது. தற்போது பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் வேண்டும் என பிழையான மனோரீதியை மக்களிடையே விதைக்க தமிழ் அரசியல்வாதிகள் முனைகின்றனர். மாகாணசபை என்பது விசாலமான அதிகாரங்களைக் கொண்ட கட்டமைப்பு . 13 ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பொலிஸ், காணி அதிகாரம் வேண்டுமென கூறுவதைவிடுத்து மாகாணசபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை எப்படி வெல்லலாம் எனச் சிந்திக்க வேண்டும். கிடைத்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனூடாக செய்ய முடிந்தவற்றை செய்யுங்கள் - என்றார். (ச-இ)

## இன முரண்பாட்டுக்கு வழியேற்படுத்தும் '13'

*குமுறுகிறார் அத்துரலிய*

அரசமைப்பின் '13'ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாகக் குறிப்பிட்டு தமிழ்- சிங்கள மக்களிடையே இன முரண்பாட்டைத் தோற்றுவிக்கிறார் ஜனாதிபதி. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

அரசமைப்பின் '13' ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி கூறிவருகிறார். '13' ஐ நடைமுறைப்படுத்தினால் தென்னிலங்கையில் வீண் முரண்பாடுகள் தோற்றம் பெறும். பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் இனமுரண்பாட்டை தோற்றுவிப்பதற்கு இது வழிவகுக்கும். எனவே 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளில் மகாநாயக்க தேரர்கள் தலையிட வேண்டும் - என்றார். (ச-இ)

## '13' பேசுபொருளாவது தேர்தல் காலத்திலேயே

*கெவிந்து குமாரதுங்க சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஓக. 5

சிறுபான்மையினரின் வாக்குகள் தீர்மானமிக்கதாக அமையவே 13ஆவது திருத்தத்தை கையிலெடுத்து விளையாடுகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இவ்வாறு நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் எதிர்க்கட்சி உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த தலைவர்கள் அனைவரும் அதிகாரப் பகிர்வு என ஒரேயோர் உறுதிமொழியையே அளித்துள்ளனர். ஆனால், இறுதியில் எதுவும் நடக்கவில்லை. சிறுபான்மையினரின் வாக்குகள் தீர்மானமிக்கதாக மாற்றியமைக்க ஜனாதிபதி '13' ஐ கையிலெடுத்துள்ளார். ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடு முறையற்றது - என்றார். (ச-இ)

**நாளை** 06.08.2023 ஞாயிற்றுக்கிழமை ஆடி 21

சுபநேரம் : 04.34 - 06.04

ராகுகாலம் : 09.04 - 10.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் ஆரோக்கியத்தை விழுங்கும் 'ஸ்மார்ட் போன்'

## மல்லாவியில் விழிப்புணர்வு




முல்லைத்தீவு, ஓக. 5

**ஸ்மார்ட் அலைபேசிகளின் பாவனை அதிகரிப்பால் சிறுவர்களின் ஆரோக்கியத்தில் தாக்கம் செலுத்தும் விடயங்கள் தொடர்பில் முல்லைத்தீவில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டது.**



ஐக்கிய நாடுகள் குழந்தை நல நிறுவனத்தின் அனுசரணையில் முதற்கட்டமாக முல்லைத்தீவு மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மல்லாவி யோகபுரம் மகா வித்தியாலய மண்டபத்தில் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

கருத்தரங்கில் குழந்தைகள் தொடக்கம் பெரியவர்கள் வரை தொலைபேசிப் பாவனையில் மூழ்கடிக்கப்படுகின்றனர்.

இளையோரிடையே தொலைபேசிப் பாவனை அதிகரிப்பால் துஷ்பிரயோகங்கள் உயர்ந்துள்ளன. உறவுகளிடையான தொடர்பாடல் அற்று விரிசல் ஏற்பட்டுச் செல்கிறது.

சிறுவயதுக்குழந்தைகள் கூட அலைபேசிப் பாவனையில் மூழ்கடிக்கப்படுவதால் அவர்களின் ஆரோக்கியம் விழுங்கப்படுகிறது.

இதுதொடர்பில் பெற்றோரிடையே விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

நிகழ்வில் மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சாந்தமேனன், சுகாதார மருத்துவ அதிகாரிகள், முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலர் பங்கேற்றனர் (ச-19)

## முகமாலையில் ரயிலில் மோதி கால்நடைகள் உயிரிழப்பு!

கொடிகாமம், ஓக. 5

முகமாலையில் கடந்த புதன்கிழமை நிறைமாத பசுமாடு ஒன்றும் 3 ஆடுகளும் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளன.

தண்டவாளம் அருகே மேய்ச்சலில் ஈடுபட்ட கால்நடைகளே ரயிலில் மோதி உயிரிழந்தன.

வடக்குக்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மேய்ச்சலில் ஈடுபடும் கால்நடைகள் ரயிலில் மோதி உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கால்நடைகளின் உயிரிழப்பைத் தவிர்க்க தண்டவாளப் பகுதிகளில் மேய்ச்சலுக்கு விடவேண்டாம் என ரயில் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (ஒ-ரி9)

## சாவகச்சேரி வணிகர்களுக்கு ஆடி அமாவாசை விடுமுறை

சாவகச்சேரி, ஓக. 5

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட அனைத்து வணிக நிலையங்களுக்கும் ஆடி அமாவாசை தினத்தன்று விடுமுறை அளிக்கப்படவுள்ளது.

நிர்வாகசபைக் கூட்டத்தில் மன்றத் தலைவர் முன்வைத்த யோசனைக்கு சபை அனுமதித்துள்ளது.

அதற்கமைய இந்த வருடம் ஆடி அமாவாசை தினத்தன்று சாவகச்சேரி வணிகர்களுக்கு மன்றத்தால் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி3-9)

## அரியாலையில் கைக்குண்டு மீட்பு

அரியாலை, ஓக. 5

அரியாலை பூம்புகாரில் கைக்குண்டு ஒன்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

வெற்றுக் காணியொன்றில் நிலத்தைக் கொத்தும்போது சந்தேகத்துக்கிடமான பொருளொன்று அவதானிக்கப்பட்ட நிலையில் உரிமையாளரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

தகவலுக்கமைய காணிப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் சந்தேகத்துக்கிடமான பொருளை கைக்குண்டு என அடையாளம் கண்டு நீதிமன்ற அனுமதியுடன் அதனைச் செயலிழக்கச் செய்தனர். (ச-ரி3-20-159-125)

## சந்நிதித் தொண்டர்களால் வெடுக்குநாறியில் பொங்கல்



வவுனியா, ஓக. 5

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் மற்றும் ஆச்சிரமத் தொண்டர்கள் இணைந்து அண்மையில் பொங்கல் மற்றும் விசேட பூசை வழிபாடுகளை மேற்கொண்டனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வழிபாட்டுக்கு எதிராக தொல்பொருள் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த நிலையில் பூசை வழிபாடுகள் இடைநிறுத்தப்பட்டன. கடந்த சில மாதங்களின் முன்பு ஆலயத்தில் அமைக்கப்பட்டிருந்த ஆதிலிங்கேஸ்வரர் உள்ளிட்ட விக்கிரகங்கள் இனந்தெரியாத விஷமிகளால் உடைத்தெறியப்பட்டன. அதனையடுத்து வெடுக்குநாறிமலை விவகாரத்தில் வழிபாடுகளை நடத்துவதற்கும் பக்தர்கள் செல்வதை எந்த அதிகாரிகளும் தடுக்க முடியாதென நீதிமன்று தீர்ப்பளித்ததையடுத்து விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-66)

## கண்காட்சி



யாழ். பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 200 ஆவது ஆண்டை முன்னிட்டு கண்காட்சி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பாடசாலை அதிபர் திருமதி செ. தேவராஜ் தலைமையில் இடம்பெற்றது. தரம் ஒன்று முதல் உயர்தரம் வரையிலான மாணவர்கள் தமது பாடங்கள் சார்ந்து பொருள்களைக் காட்சிப்படுத்தினர்.

அதேவேளை பாடசாலையின் 200 ஆவது ஆண்டையொட்டி அண்மையில் தபால் முத்திரை வெளியீடு, சைக்கிள் பவனி, விளையாட்டு நிகழ்வுகள் என்பன [illegible] இடம்பெற்றன. (ச-ரி3-125)

## நூற்றாண்டில் கலாசாலை வாராந்தம் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 5

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வாராந்த சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த புதன்கிழமை கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

ஆசிரிய கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் சிறப்பு அதிதியாக பங்கேற்று 'உள்ளத்தனையது உயர்வு' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

அதிதி அறிமுக உரையை விரிவுரையாளர் ந.அனந்தசயனன், உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவன் இ.இராஜகோகுலன் ஆகியோர் ஆற்றினர். (ச-ரி3-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

K.K.S.றோட் மல்லாகம்
(J-214) 2 1/4 பரப்பு (பழைய சோடா
கொம்பனி ஒழுங்கை அருகில்)
விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)
**T.P.: 077 753 2994**

## பணியாளர்கள் உடன்தேவை

திருநெல்வேலியில் இயங்கும் பிரபல உணவகம் ஒன்றுக்குப் பின்வரும் வேலையாள்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(பகுதி நேர வேலையும் உண்டு)

- ✓ கொத்துரொட்டி தயாரிப்பவர்
- ✓ ரைஸ் தயாரிப்பவர்
- ✓ சமையல் வேலை (ஆண், பெண்)
- ✓ சமையல் உதவியாளர்
- ✓ உணவு பரிமாறுபவர்
- ✓ காசாளர்

(CS/51522) AH-1

**077 171 7149, 077 668 7688**

## மோ.சைக்கிள் திருட்டு
# ஒன்றரை வருடத்தின் பின் கைதானார் சந்தேகநபர்!

யாழ்ப்பாணம், ஓக. 5

மோட்டார் சைக்கிளைத் திருடிய குற்றச்சாட்டில் கடந்த ஒன்றரை வருடமாகதலைமறைவாகியிருந்த சந்தேகநபர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 2021ஆம் ஆண்டுதிருட்டுப்போன மோட்டார் சைக்கிளொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டது. எனினும் அதனைத் திருடிய சந்தேகநபர் தலைமறைவாகியிருந்தார். இந்தநிலையில் அவர் அராலியில் நடமாடுவதாக நேற்றுமன்தினம் கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரை கைதுசெய்துள்ளனர். சந்தேகநபருக்கெதிராக வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் - முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் 2023.09.01 ஆம் திகதி முதல் நியமிக்கப்படும் வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. முழுநேரமாக யாழ் மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்
2. இந் நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனைச் சேவை நீடிக்கப்படலாம்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள். உறுதிகளை அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.
5. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறி வித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. 45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**கொடுப்பனவு விபரம்**

1. மாதாந்த கொடுப்பனவு ரூபா 125,000 ஆகும்.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மாதாந்த கொடுப்பனவின் எட்டு வீதமான (8%) தொகை மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும்.
3. மாதாந்த கொடுப்பனவின் பன்னிரண்டு வீதமான (12%) தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மூன்று வீதமான (3%) தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் சபை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் முலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப் படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் **"ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 18.08.2023**

**ஆணையாளர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்**
**04.08.2023**

(cr.40358) (N.1)

## சேவை நலன் பாராட்டு



Congratulations

யாழ். மாவட்ட கமநல
அபிவிருத்தி திணைக்களத்தில்
உதவி ஆணையாளராகவும், பிரதி
ஆணையாளராகவும் 04.12.2013
இல் இருந்து
21.06.2023 வரை
தன்னலமற்ற அர்ப்பணிப்புமிக்க
சேவையாற்றி கடந்த 22.06.2023
முதல் ஜனாதிபதி
செயலகத்தில் பணிப்பாளராக
பதவி உயர்வு பெற்றுச்
சென்றுள்ள மதிப்பிற்குரிய

**திரு.இரத்தினகுமார் நிஷாந்தன்** அவர்களை

பாராட்டுவதோடு மேலும் பல பதவி உயர்வுகளையும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ இறைவனின் திருவருள் கிடைக்க வேண்டும் என பிரார்த்திப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

Best wishes

உத்தியோகத்தர்கள்,கமக்கார அமைப்புகள்
கமநல சேவைகள் நிலையம் - கைதடி.

(CS/51026)AH-1

## சேவை நலன் பாராட்டு



யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில்
உதவி ஆணையாளராகவும்,
பிரதி ஆணையாளராகவும் 04.12.2013 இலிருந்து
21.06.2023 வரை தன்னலமற்ற அர்ப்பணிப்புமிக்க சேவையாற்றி
கடந்த 22.06.2023 முதல் ஜனாதிபதி
செயலகத்தில் பணிப்பாளராக
பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள மதிப்பிற்குரிய

**திரு.இரத்தினகுமார் நிஷாந்தன்** அவர்களை

பாராட்டுவதோடு மேலும் பல பதவி உயர்வுகளையும் பெற்று
சீரும் சிறப்புமாக வாழ இறைவனின் திருவருள் கிடைக்க வேண்டும்
என பிரார்த்திப்பதில் பெருமகிழ்வடைகின்றோம்.

Congratulations

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
மாவட்ட அதிகாரசபை மற்றும் கமக்காரர் அமைப்புக்கள்
யாழ். மாவட்டம்.

(cs 51520) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 • 03 • 1952



மறைவு 15 • 08 • 2022

## அமரர் சோமு சிவஞானம்

**(ஓய்வுபெற்ற வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்கள ஊழியர், முன்னாள் மேக்கன்ரைல் பாதுகாப்பு உத்தியோகத்தர்)**

அன்புக்கு இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்தீர்கள்
எங்களையும் வாழவைத்தீர்கள் அப்பா!
கண்கவரும் கம்பீரத் தோற்றமும்
கணீரென்ற கனிவான பேச்சுரையும்
அன்பே உருவான வட்ட முகம்தனிலே
இன்பமாய் உதிர்க்கும் உதட்டோர சிரிப்பும்
இன்றும் மறக்க முடியவில்லை
ஆண்டுகள் பல ஓடிமறைந்தாலும் அப்பா!
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


**குடும்பத்தினர்.**
**மனைவி - மல்லிகாதேவி**
**பிள்ளைகள் - அஜந்தன், மயூரத, சுஜானா**

**கோணாவாளை, வசாவிளான்.**

(CS/51442)AH-1

---

# சேவைநலன் பாராட்டு



BEST wishes

எமது பாடசாலையில்
சேவையாற்றி இன்று
(05.08.2023)
சனிக்கிழமை ஓய்வுபெறும்
எங்கள் ஆசிரியர்

## திரு.பாலசிங்கம் உதயகுமார் அவர்கள்

**பயிற்றப்பட்ட கணிதம்- B.A**

**சேவைக்காலம்**

ஆசிரியர் பணியில் - 21.10.1988 - 05.08.2023

| | |
|---|---|
| யா/கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தி | : 21.10.1988 - 04.02.1991 |
| யா/பலாலி ஆசிரியர் கலாசாலை | : 05.02.1991 - 31.12.1992 |
| யா/நாவற்குழி மகா வித்தியாலயம் | : 01.01.1993 - 30.09.1998 |
| யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தி | : 01.10.1998 - 09.01.2008 |
| யா/ஊரெழு கணேசா வித்தியாசாலை | : 10.01.2008 - 17.02.2010 |
| யா/உரும்பிராய் சந்திரோதய வித்தி | : 18.02.2010 - 08.03.2012 |
| மு/அளம்பில் றோமன் க.வித்தி | : 09.03.2012 - 26.09.2012 |
| மு/செம்மலை மகா வித்தியாலயம் | : 27.09.2012 - 09.03.2014 |
| யா/ஒஸ்மானியா கல்லூரி | : 10.03.2014 - 28.04.2015 |
| யா/ கதீஜா பெண்கள் கல்லூரி | : 29.04.2015 - 18.06.2018 |
| யா/ நாவாந்துறை றோ.க.வித்தி | : 19.06.2018 - 05.08.2023 |

தனது 60ஆவது வயதில் 35 வருடகால ஆசிரியப் பணியில் இருந்து இன்று (05.08.2023) சனிக்கிழமை ஓய்வுபெறும் ஆசிரியரின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன், இவரது ஓய்வுகாலம் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**யா/ நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.**
**யாழ்ப்பாணம்.**

(CS 25786) A-1

---

# மரண அறிவித்தல்

மலர்வு • 27 • 04 • 1937



உதிர்வு 03 • 08 • 2023

## திருமதி திருச்செல்வம் யோகமலர்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மாபாகே.றாகம (கொழும்பை) வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் யோகமலர் நேற்றுமுன்தினம் (03.08.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருச்செல்வம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான யோசப் ஞானம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செபத்தியம்பிள்ளை ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், அருள்மலர், ராஜகோன், காலஞ்சென்ற ரெஜினா மற்றும் வனஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அஞ்சனா, வத்சலா, பென்வற், ஹம்வற் ஆகியோரின் அன்புத் தாயாரும், வில்வராஜா, அலெக்ஸ், சுகந்தி, நிஷா ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுஜா, சஞ்சுதன், கனுசியா, நியூலின், மேனன், விகாஷன், அக்ஷனா, அகன்ஷா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பென்வற் - 077 710 0874**
**அலெக்ஸ் - 077 530 8315**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

# மரண அறிவித்தல்

பிறப்பு • 27 • 07 • 1936



இறப்பு • 03 • 08 • 2023

## திருமதி முருகையா சரஸ்வதி

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி முருகையா சரஸ்வதி அவர்கள் கடந்த (03.08.2023) வியாழக்கிழமை இயற்கை மரணம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அமரர் முருகையாவின் அன்பு மனைவியும், நேசமலர் (மாவட்டச் செயலகம்- மன்னார்), சிவநேசன் (சுவிஸ்), தவநேசன் (பிரான்ஸ்), நேசராணி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் அனுஷா (சுவிஸ்), உமாராணி (பிரான்ஸ்), ரவிக்குமார் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும், பாநிதி - பார்த்தீபன் (சிங்கப்பூர்), திஷாந் (மாணவன்), யனுயன் (சுவிஸ்), கிருஷன் (சுவிஸ்), துலக்ஷன் (பிரான்ஸ்), கோபிலக்ஷன் (பிரான்ஸ்), நிவேதிகா (பிரான்ஸ்), ஹரிசன் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், மீனாட்சிபிள்ளை, பாலசுப்பிரமணியம், முருகையா மற்றும் நடராசா, கதிர்காமத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வேலாயுதம், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், செல்லத்துரை மற்றும் சண்முகசுந்தரம், கந்தசாமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பன்னாலை, தெல்லிப்பளை.**

**077 891 1104**
**021 224 5757**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25785) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரத்தை...

வழங்குவதற்காக, 'நிர்வாக அதிகாரம்' பிரிக்கப்படவேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது. ஆனால், அது ஒற்றையாட்சிக்குள் அடங்குகின்ற அதிகாரப் பகிர்வாக இருக்க வேண்டும் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நம் நாட்டின் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் நன்றி உணர்வு உள்ளவர்கள் என்பதை நான் அறிவேன். 30 வருடங்களாக போர் இடம்பெற்ற இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவேண்டிய பொறுப்பு அரசாங்கம் என்ற வகையில் எமக்கு உள்ளது. வடக்கு மக்கள், தெற்கு மக்கள் அனைவரும் ஒன்று தான்.

எமது பிள்ளைகள் பெறும் கல்வியை வடக்குப் பிள்ளைகளும் பெறவேண்டும். ஆனால் போர்க் காலத்தில் இந்தப் பிள்ளைகளுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை. இந்த நாட்டிலுள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிக்க வேண்டும். மக்களுக்கு மனித உரிமைகளை வழங்குவது ஒவ்வொரு அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இன்று அதிகாரப்பகிர்வு தொடர்பில் மீண்டும் விவாதங்கள் ஆரம்பமாகியுள்ளன. ஒற்றையாட்சியின்கீழ் அதிகாரப் பரவலாக்கம் என்பது நம் அனைவரின் நம்பிக்கை. நிர்வாக அதிகாரம் பிரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அனைவரும் இருக்கிறோம். வடக்கு - கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதியின் வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (அ-ம)


**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறையில் புலோலி வட கிழக்கில் 10 பரப்பில் அமைந்த தோட்டக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **0777 111 716**

**தேவை**

கோண்டாவில் கொக்குவில் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. தரகர்கள் தேவையில்லை.

**071 533 1889**

**முதலாம் வருட நினைவஞ்சலி**

**திருமதி பூமணி வைத்தியலிங்கம்**



தோற்றம் 12.10.1931

மறைவு 17.07.2022

அருள்வழி காட்டி என்றும்
அருகிருந்து அமுதமூட்டி
திருமுறை பயில வைத்து
தீமைகள் அணுகா வண்ணம்
- ஈசன்

மருவிடும் மங்கையோடு
மா கணபதி முருகன் மாயோன்
திருவெனத் தொழவும் வைத்து
தூய நல் அறிவு தந்தாய்
கரிமுகன் அருளினாலே அவன்
கழலினில் பெறுக சாந்தி!

துரைவீதி,
இணுவில் தெற்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்.

**நினைவஞ்சலிக் கூட்டம்**



காலஞ்சென்ற

**செல்வி. சாந்தா அபிமன்னசிங்கம்**

**சனாதிபதி சட்டத்தரணி**

(முன்னாள் தலைவர், யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம், முன்னாள் உப-தலைவர், (வடக்கு வலயம்), இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்)

அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டத்திற்கு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

திகதி : 06 ஆகஸ்ட் 2023 (ஞாயிற்றுக் கிழமை)
நேரம் : பி.ப 3.00 - 7.30 மணி
இடம் : US Hotel,
இல. 855, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஏற்பாடு:
செல்வி. சாந்தா அபிமன்னசிங்கத்தின்
இளநிலைச் சட்டத்தரணிகள்


(CS 25784A-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 08.11.1937

## திரு.செல்லத்துரை சோமசுந்தரம்

மறைவு 04.08.2023



216, மூளாய் றோட் (குருசோ வீதி), சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட உத்தரவு பெற்ற வியாபாரி திரு.செல்லத்துரை சோமசுந்தரம் அவர்கள் நேற்று (04.08.2023) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சின்னத்தங்கம் தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி (ராசு) அவர்களின் பாசமிகு கணவரும், ஞானாம்பிகை (ஆசிரியர், யாழ். பாசையூர் சென். அன்ரனிஸ்), இந்துமதி (பிரான்ஸ்), கிருஷ்ணாம்பிகை (ஆசிரியர், யா/இணுவில் இந்துக் கல்லூரி), மீனாம்பிகை (கனடா), வரதராஜன் (பிராந்திய முகாமையாளர் Abans) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலதாசன், பாலேந்திரன் (பிரான்ஸ்), சிவகுகன், அசோக்குமார் (கனடா), சுதர்ஜினி (அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஷாமந்தி, ஜனார்த்தனி, ஆரணி, ஹரிஸ் மேனன், ஹரிஸ் மேனுசன் மற்றும் காலஞ்சென்ற ஹரிஸ்மதுஷன், ஹரிஸ் மிதுஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான வாலாம்பிகை, கனகசபாபதி மற்றும் நாகேஸ்வரி, சிவராமலிங்கம், சரஸ்வதி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இரத்தினம்மா மற்றும் நவரத்தினம் காலஞ்சென்ற நடராசா மற்றும் மகேஸ்வரி, தனேஸ்வரி, இராணியம்மா காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் இராஜராஜேஸ்வரி, கந்தையா, யோகேஸ்வரி, பாலசிங்கம், தேவமகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 344 6935 (மகன்)**

(CS 25787) 1-6


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.டி.பி. கும்பலின் ஏமாற்றுக்கு மனோ துணை நிற்கக்கூடாது

## கஜேந்திரகுமார் எம்.பி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஓக. 5

தாங்கள் பிழையான தரப்பு இல்லை என்பதை மக்களிடம் காண்பித்து ஏமாற்றுவதற்காகவே ஈ.பி.டி.பி. கும்பல் 'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி' கோஷத்தை முன்வைத்து வருகின்றது. அதே பிழையை தமிழ்த் தேசியம் பேசும் மற்றவர்கள் செய்வதற்காக அவர்கள் செய்வதைச் சரியென்று பார்ப்பது தவறு. அந்தத் தவறை மூடிமறைக்கவோ அல்லது அதற்குத் துணைபோகும் வகையிலோ மனோ கணேசன் செயற்படக்கூடாது - என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் மக்களிடம் வாக்கைப் பெறுவதற்கு சமஷ்டியை வலியுறுத்திவிட்டு மக்கள் ஆணையைப்பெற்ற பின்னர் ஒற்றையாட்சிக்குள் தமிழ் அரசியலை முடக்குவதற்காக தமிழ்க் கட்சிகள் செயற்படுகின்றன என்பது தான் எமது குற்றச்சாட்டு.

டக்ளஸ் தேவானந்தா கூட கட்சியின் கோஷமாக மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற கோட்பாட்டை வைத்திருக்கிறார். அவர் கூட சமஷ்டியை வலியுறுத்தி வருவதாக மனோ கணேசன் கூறியிருக்கிறார். அது உண்மை.

ஆனால் எந்த ஓர் இடத்திலேயும் டக்ளஸ் தேவானந்தா சமஷ்டிக்கு நேர்மையாக பயணிக்கிறார் என தமிழ் மக்கள் சொல்வதில்லை. அது ஈ.பி.டி.பி.யின் வெறும் கோஷம். அவர்களின் செயல் முழுக்க ஒற்றையாட்சிக்கு உட்பட்டது.

அதனாலேயே மக்கள் டக்ளஸை துரோகியாக பார்க்கின்றார்கள். அதே துரோகத்தைத்தான் மற்றக் கட்சிகளும் செய்கின்றன. அதே விடயத்தைத் தானே மனோ கணேசனும் ஆதரிக்கிறார்?

75 ஆண்டுகளுக்குப் பின்னரும் படிப்படியாகத்தான் போகவேண்டும் என்று சொல்வதை ஏற்க முடியாது. அந்த அணுகு முறையில் பிழை உண்டு.

ஈழத்தமிழர்களை பொறுத்தவரை அந்த தெளிவு இருக்கின்றது. மனோ கணேசன் மலையக மக்கள் சார்ந்து அரசியல் செய்வதனால் சிலவேளை அவரால் விளங்கிக்கொள்ள முடியாமல் இருக்கலாம் - என்றார். (ஒ-100)

# மருத்துவர்கள் தஞ்சமடையும் வெளிநாடுகளிடம் நட்டஈடு!

## ஜனாதிபதி வகுக்கிறார் வியூகம்

கொழும்பு, ஓக. 5

**நாட்டிலிருந்து வெளியேறி வெளிநாடுகளுக்குச் செல்லும் மருத்துவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளிடமிருந்து நட்டஈடு கோருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சுகாதார அதிகாரிகளுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் அரச செலவில் மருத்துவக் கற்கைநெறிகள் மற்றும் பயிற்சிகளை முடித்துவிட்டு சொந்த நாட்டுக்குச் சேவையாற்றாது மருத்துவர்கள் வெளியேறி வருகிறார்கள்.

ஒரு மருத்துவ மாணவரின் மருத்துவக் கற்கை மற்றும் பயிற்சி நெறிகளுக்காக, அரசாங்கம் ரூபா 60 இலட்சத்துக்கும் அதிகமான நிதியைச் செலவிடுகிறது.

அந்தவகையில் அடுத்தவாரம் நடைபெறவுள்ள உலக சுகாதார ஸ்தாபன மாநாட்டில் அதன் செயலாளரிடம் மேற்படி கோரிக்கையை விடுக்கவுள்ளேன்.

வெளிநாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் நட்ட ஈட்டின் மூலம் புதிய மருத்துவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கம் அறிவித்துள்ள புதிய வரிக்கொள்கையில் அதிருப்தி மற்றும் வெளிநாடுகளில் இருக்கும் வரவேற்பு என்பனவற்றால் மருத்துவர்கள் அதிகளவில் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-6)



## நூல்களின் வெளியீடு!

சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும், அல்வாய் வடக்கைச் சேர்ந்த திருமதி நிர்மலா சிவராசசிங்கத்தின் நான்கு கவிதை நூல்களின் வெளியீட்டு விழா அல்வாய் மெதடிஸ்த ஆலயத்தின் ஆழ்வார்ப்பிள்ளை மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற உள்ளது.

ஓய்வுநிலை வங்கி முகாமையாளர் கொற்றை பி.கிருஸ்ணானந்தனின் தலைமையில் நடைபெற உள்ள விழாவில் வரவேற்புரையை உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கச் செயற்பாட்டாளர் தென்றல் சிவம் நிகழ்த்த உள்ளார்,

நூல் வெளியீட்டுரையை எழுத்தாளர் வேதநாயகம் தபேந்திரன் நிகழ்த்த, முதற்பிரதிகளை ஓய்வுநிலை ஆசிரியர் செ.மதியழகன், சமாதான நீதிவான் செ.குலவீரசிங்கம், முதுநிலைப் பொறியியல் ஆலோசகர் க.காண்டீபன் ஆகியோர் பெற உள்ளனர்.

நூல்களின் நயவுரைகளை 'எழில் விருத்தம்' நூலுக்கு வல்வை சிதம்பராக் கல்லூரி ஆசிரியர் கலாநிதி க.குணேஸ்வரனும், 'பொன்வண்ணம்' நூலுக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தனும், 'சிந்து கவிச்சாரல்' நூலுக்கு தேவரையாளி இந்துக் கல்லூரி ஆசிரியர் மா. 'செல்வதாஸும், 'ஓடை நிலா' நூலுக்கு தேசியக் கலை இலக்கியப் பேரவையின் முன்னாள் செயலர் மு.அனாதரட்சகனும் ஆற்ற உள்ளனர். நிறைவாக ஏற்புரையை நூலாசிரியர் ஆற்ற உள்ளார். (ம)

## யாழ்...

12 மில்லியன் அமெரிக்க டொலரை மானியமாக வழங்கியுள்ளநிலையில், இந்தத்திட்டத்துக்காக இலங்கை மின்சாரசபை கூறுவிலையைக் கோரியுள்ளது.

இந்தத் திட்டம் சீனாவின் நிதியுதவியின் கீழ் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இந்தியா வெளிப்படுத்திய கடுமையான எதிர்ப்பையடுத்து சீனாவை மெல்ல விலக்கியது இலங்கை. இதற்குச் சீனா கடும் அதிருப்தி தெரிவித்ததுடன், திட்டத்தைக் கைவிட்டு மாலைதீவில் உள்ள பன்னிரு தீவுக்கூட்டங்களில் புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தியை மேற்கொள்ள மாலைதீவு அரசாங்கத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டது.

இதன் பின்னர், யாழ்ப்பாணத் தீவுகளில் மேற்கொள்ளப்படும் புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்திக்காக 12 மில்லியன் டொலரை இலங்கைக்கு மானியமாக அறிவித்தது இந்தியா. இந்தத் திட்டத்துக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் முற்றுப்பெற்றுள்ள நிலையில், திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக கூறுவிலை கோரியுள்ளது இலங்கை மின்சாரசபை.

இந்தியாவின் முன்னணி முதலீட்டு நிறுவனமான அதானி, மன்னார் மற்றும் பூநகரியில் சுமார் 350 மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்ய இரண்டு காற்றாலை மின் நிலையங்களைத் தொடங்குவதற்கான திட்ட அனுமதியை ஏற்கனவே பெற்றுள்ளது. இந்த நிறுவனம் 2025ஆம் ஆண்டுக்குள் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம)

## வேலிச் சண்டையில் குமார வெல்கம எம்.பி.

காணியில் வேலி அமைப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கமவுக்கும் மத்துகம பாடசாலை அதிபர் ஒருவருக்கும் இடையில் கடும் மோதல் நிகழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மத்துகம நகரிலுள்ள மரக்கறிச் சந்தையில் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவுக்குச் சொந்தமான காணியொன்று மத்துகம நகரில் உள்ளது. அதனை அண்டிய காணி பாடசாலை அதிபரொருவருக்கு சொந்தமானது. குறித்த காணியில் முட்கம்பி வேலி அமைப்பதற்காக அதிபர் தயாரானபோது நாடாளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அதனையடுத்து இருதரப்பினரிடையேயும் காரசாரமான வார்த்தைப் பரிமாற்றம் ஏற்பட்டு அது மோதலாக மாறியது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். முரண்பாடு தொடர்பில் இரு தரப்பிலும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் மத்துகம பொலிஸார் இரு தரப்பினரையும் சமரசம் செய்துள்ளனர். (ச-இ)

## மாகாணசபைகளிடம் இருந்து

# பொலிஸ் அதிகாரத்தைப் பிடுங்கும் சட்டவரைவு சபையில் ஒப்படைப்பு

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாணசபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்பட்டு - பொலிஸ் ஆணைக்குழு முற்றாக இல்லாதொழிக்கும் வகையில் 22 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டவரைவை நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தனிநபர் வரைவாக நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

நாடாளுமன்ற பதில் பொதுச்செயலாளர் ஹன்ச அபேரத்னவிடம் கம்மன்பில நேற்றுமுன்தினம் கையளித்தார்.

அந்த உத்தேச சட்டவரைவில் பொலிஸ் அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டால் அதன்மூலம் பாரதூரமான பின்விளைவுகள் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய பொலிஸ், மாகாண பொலிஸ் என்ற இரு பிரிவுகள் உருவாகி நாட்டில் பல்வேறு குழப்பநிலை உருவாகும்.

தேசிய பாதுகாப்பை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையிலான ஏற்பாடுகளே 13ஆவது திருத்தத்திலுள்ள பொலிஸ் அதிகாரம். மாகாண பொலிஸ் ஆணைக்குழுவை ஸ்தாபித்தல் தொடர்பில் 13ஆவது திருத்தச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் 15.5 'அ' பிரிவை உருவாக்கி அதனை தேசிய ஆணைக்குழுவாக பெயரிடப்பட வேண்டுமெனவும் கம்மன்பில அதில் வலியுறுத்தியுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றே...

தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை விரைவில் நடத்தும் நோக்குடன், அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தலைமன்னார் பியர் மற்றும் தலைமன்னார் பழையபாலம் ஆகிய பகுதிகளில் நேற்றுக் கள ஆய்வை மேற்கொண்டார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையிலான கப்பல் சேவையை இரண்டு பகுதியான நடவடிக்கைகளின் கீழ் முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி கப்பல் சேவையை விரைந்து ஆரம்பிக்கும் நோக்குடன் தற்காலிக அபிவிருத்திகளை மேற்கொண்டு அடுத்த மூன்றே மாதங்களில் கப்பல்களை இயங்க வைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை - நீண்ட காலச் சேவையைக் கருத்திற்கொண்டு இதர கட்டுமானங்களையும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தின்போது எட்டப்பட்ட உடன்பாடுகளில் தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையிலான கப்பல் சேவையும் ஒன்றாகும். அதன் தொடர்ச்சியே இந்தத் துரித கட்ட நடவடிக்கைகள் என்று பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அமைச்சர் நிமாலின் களப்பயணத்தின் போது, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் உட்பட மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல், மன்னார் பிரதேச செயலர் எம்.பிரதீபன் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் செயலாளர்கள், கடற்படை அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

(அ-ம-60,213)

## உணவு...

டி சில்வா தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவும் பாகிஸ்தானும் தற்போது அரிசி ஏற்றுமதியை தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளன. எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ள உலக உணவு நெருக்கடியை எதிர்கொள்ள அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

எனவே, ஒருநாடு என்ற வகையில், இந்த நெருக்கடியை எதிர்கொள்ள நாமும் தயாராகவேண்டும். நாட்டின் விவசாயத்துறையை மேம்படுத்துவதை அரசாங்கத்தால் மாத்திரம் செய்ய முடியாது. அதற்கு அனைவரின் ஆதரவும் அவசியம். அதன்படி, நாட்டில் கைவிடப்பட்டுள்ள வயல் நிலங்களில் மீண்டும் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அந்த வகையில் சுமார் 11 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களில் பயிரிட எதிர்பார்த்துள்ளோம். கமநல அபிவிருத்தித் திணைக்களம் இதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்காக அரசாங்கம் 420 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக நெல் கொள்வனவை இடைநிறுத்தியிருந்த நெல் சந்தைப்படுத்தல் சபை, ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் மீண்டும் முறையான வழிமுறைகள் ஊடாக நெல் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. கொள்வனவு செய்யப்படும் நெல் கையிருப்பை களஞ்சியப்படுத்த நாடு பூராகவும் களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. எமது நாட்டின் பயன்பாட்டுக்கு சுமார் 24 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி தேவைப்படுகின்றது. தற்போது முன்னெடுக்கப்படும் முறையான பொறிமுறைகளின் மூலம் எதிர்காலத்தில் எமது நாடு அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடையும் என்று எதிர்பார்க்கின்றோம். மேலும், சோளம், உளுந்து, பயறு உள்ளிட்ட மேலதிக பயிர்களின் விளைச்சலை அதிகரிக்க விவசாய அமைச்சின் ஆலோசனையின் பேரில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (அ-ம-26)

## கால்நடைகள்...

சம்பவிப்பதற்குள் உரிய அதிகாரிகள் கால்நடைகளை விரைந்து பாதுகாத்துத் தரவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டத்தின் பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, கரைச்சி வடக்கு கால்நடை கூட்டுறவாளர் சங்கத்தின் தலைவர் இது தொடர்பில் நேற்றுத் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் தற்போது நிலவும் வரலாறு காணாத வறட்சியின் விளைவாக நீர் நிலைகள் வறண்டு போயுள்ளன. ஓரிரு நீர்நிலைகளில் உள்ள தண்ணீரே கால்நடைகளின் உயிரைக்காத்து வருகின்றது. அடுத்த சில தினங்களுக்குள் மழை பொய்க்கும் பட்சத்தில் தற்போதுள்ள கொஞ்சத் தண்ணீரும் இல்லாமல் ஆகிவிடும். இது கால்நடைகள் இறப்பதற்கும் காரணமாக அமைந்துவிடும். எனவே, இந்தப் பேரிடர் ஏற்பட முன்னர் இதற்கு அதிகாரிகள் காத்திரமானதொரு தீர்வை வழங்கவேண்டும். ஏற்கனவே முட்டைகளை இறக்குமதி செய்யும் நிலைக்கு நாடு வந்தாயிற்று. பாலையும் இறக்குமதி செய்யும் நிலை வராமல் இருக்கவேண்டுமாயின் கால்நடைகளின் ஆரோக்கியத்தையும் இருப்பையும் உறுதிப்படுத்த வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும் - என்றார். (அ-ம-113)

## இளைஞர்களுக்கு...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது இளைஞர்கள் படிப்படியாக விவசாயத்திலிருந்து விலகி வருகின்றனர். விவசாயத்துறையில் இளைஞர் சமுதாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இளைஞர் தொழில்முனைவோர் விவசாய கிராமங்களை நிறுவும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்காக பயன்படுத்தப்படாத அரச காணிகளை இளைஞர்களின் விவசாய நடவடிக்கைக்காக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரவு - செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிட்டபடி, விவசாயத்துறைக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேசிய விவசாயக் கொள்கையை திருத்தங்களுடன் தயாரிக்கும் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளது. இது விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் - என்றார். (அ-ம-26)

## மூன்றாந்...

ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்நாடு வங்குரோத்து நாடு. தற்போதைய அரசாங்கத்துக்குப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு முன்னேறிச் செல்வதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது. கடன் நீடிப்பின் பின்னரும் எமது கடன்களை மீளச் செலுத்தாமல் இருக்க முடியாது. மறுசீரமைப்புகள் தடைப்பட்டால் வெளிநாடுகள் எம்முடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடாது. மீண்டும் நாட்டுக்குள் எரிபொருள் வரிசை, உரத் தட்டுப்பாடு என்பன உருவாகும். அரச நிதி நிர்வாகம் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்பான விடயமாகும். மேற்படி வேலைத்திட்டத்தை நாடாளுமன்றம் அங்கீகரித்துள்ளது.

அரசமைப்பின் நான்காவது உறுப்புரைக்கமைய மக்களின் இறைமை அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளது. நாடாளுமன்றத்தின் பொறுப்புகளை நாடாளுமன்றம் நிறைவேற்றும். ஏனைய செயற்பாடுகளை நீதிமன்றத்தின் ஊடாக மேற்கொள்ளமுடியும். அதன்படி நிதிசார் செயற்பாடுகள் அனைத்தும் நாடாளுமன்றத்திலேயே முன்னெடுக்கப்படும். அதனால் நாடாளுமன்றத்தின் சட்டத்திட்டங்களுக்கு அமையவே அரசாங்கம் செயற்படும்.

நாம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்தை நாடாளுமன்றத்தின் அறிவிப்பின்றி நிறுத்தப்போவதில்லை. அதனால் நாடாளுமன்றம் தவிர வேறு எந்த தரப்பினரதும் ஆலோசனைகளையோ நிபந்தனைகளையோ பெற்றுக்கொள்ள நாம் தயாரில்லை. அதனால் அநாவசியமான பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டாமென கட்சிகளிடத்தில் கோரிக்கை விடுக்கிறேன்.

அதேபோல் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை முன்னேற்றவேண்டும். சம்பிரதாய அரசியல் முறையினால் இந்நாட்டை முன்னேற்றமுடியாது. மீண்டும் சம்பிரதாய அரசியல் முறையின் ஊடாக நாட்டை அழிக்க இடமளிக்கப் போவதில்லை. இந்தநாட்டை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டுள்ளேன். அந்தப் பொறுப்பை நான் நிறைவேற்றுவேன். அது தொடர்பிலான நடவடிக்கைகளை நாடாளுமன்றத்துடன் முன்னெடுப்பேன். குறிப்பாக கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் நாம் நாடாளுமன்றத்துக்கு மட்டுமே பொறுப்புக் கூறுவோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து அந்த முயற்சிகளை வெற்றிகொள்வோம்' - என்றார். (அ-ம-26)

## எரிவாயு...

போவதில்லை என்று லிட்ரோ நிறுவனம் நேற்று மாலை அறிவித்துள்ளது.

சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்ததைத் தொடர்ந்து நேற்று இரவுமுதல் எரிவாயுவின் விலை மாற்றியமைக்கப்படும் என்று லிட்ரோ அறிவித்திருந்தது. இதனால், எரிவாயுவின் விலைகள் அதிகரிக்கலாம் என்று கருதப்பட்ட நிலையில், விலையில் மாற்றம் எதுவும் செய்யப்படாது என்று லிட்ரோ திடீர் அறிவிப்பை விடுத்துள்ளது. லாப்ஸ் நிறுவனமும் தனது எரிவாயு சிலிண்டர்களில் விலையில் மாற்றங்கள் இல்லை என்று அறிவித்துள்ளது.

(அ-ம-6)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேறாக்கன்னி கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 14 லட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 12 லட்சம் வரையும் உள்ளது.
- பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு - ஜெயம்

077 8147 389
077 9865 457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11,798...**

புதிய காடுகளை உருவாக்க வனவளத் திணைக்களம் பரிந்துரைத்துள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரையின் அடிப்படையில் 11 ஆயிரத்து 798 ஹெக்ரேயர் நிலப்பரப்பு புதிய காடுகள் உருவாக்கத்துக்காகத் தேவைப்படும். முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவான மக்களின் நிலங்கள் வனவளத்திணைக்களத்தின் ஆளுகையின் கீழ் காணப்படுகின்றது. இதனால் இந்தப் புதிய காடுகளின் உருவாக்கத்துக்கு மக்களின் காணிகள் அபகரிக்கப்படும் அபாய நிலைமை காணப்படுகின்றது என்று பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்களும், ஆர்வலர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கும் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. (அ-ம-19,213)

**13 ஆவது...**

பரிந்துரைகளையும் முன்மொழிவுகளையும் முன்வைக்குமாறு கட்சித் தலைவர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டார். இதன்போது 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியப் பிரதமர் மோடி ரணிலிடம் வலியுறுத்தியிருந்தார். எனினும், 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தனது அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட விடயம் என்று தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, இந்த விடயத்தில் நாடாளுமன்றமே இறுதி முடிவெடுக்கும் என்று அறிவித்துள்ளார். இந்தப் பின்னணியிலேயே அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பான பரிந்துரைகளையும் முன்மொழிவுகளையும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பாக முன்வைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க கட்சித் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் கடந்த மாதம் 26ஆம் திகதி நடத்தப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களுக்கு அமைவாக ஜனாதிபதியின் பணிப்புரையின்பேரில் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது .(அ-ம-26)

**பறாளாய்...**

என்றும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக இன்று போராட்டங்களை நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் சங்கானையில் இன்று பி.ப. 3 மணிக்கு போராட்டமொன்று ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதேவேளை - சுழிபுரம் சந்திப் பகுதியில் இன்று மு.ப. 10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் மற்றொரு போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போராட்டம் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்ததாவது:-

வரலாற்றினை திரிபுபடுத்தும் சிங்கள அரசு, தற்போது இன்னும் ஒருபடி மேல் சென்று சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தின் வரலாற்றையும் திரிபடையச் செய்துள்ளது. சங்கமித்தை இலங்கைக்கு வருகைதந்த ஆண்டாக கி.மு. மூன்றாம் நூற்றாண்டு காணப்படுகின்றது. ஆனால், சுழிபுரம் பறாளாய் ஆலயம் 1798ஆம் ஆண்டிலேயே அமைக்கப்பட்டது. ஆலயம் அமைக்கப்படும் போது அந்த வளாகத்தில் அரச மரங்கள் எவையும் காணப்படவில்லை என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். இதிலிருந்து திட்டமிட்ட பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அமைய வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டமை தெளிவாகின்றது. எனவே, சிங்கள - பௌத்த பேரினவாத அரசின் இத்தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக யாழ்ப்பாணம், சுழிபுரம் சந்தியில் நாளை (இன்று) மு.ப. 10 மணியளவில் போராட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பொதுமக்களும் ஆர்வலர்களும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு போராட்டத்தை மேலும் வலுச்சேர்க்கவேண்டும் - என்றனர். (அ-ம-125)


**கட்டடம் வாடகைக்கு**

206/2, ஸ்ரான்லி றோட்டில் 2300 சதுர அடி கொண்ட **CDB Bank** ற்கு மேல் அமைந்துள்ள கட்டடம் வாடகைக்குண்டு.

தொடர்பு: **077 360 9005**

**விற்பனைக்கு**

HERO - Pleasure Bike - ஆண்களின் Bike உடனும் மாற்றப்படும். (BCW----) 775)

**077 959 9022**

**Lovely Flower Shop**

Main Street Jaffna இல் உள்ள கடை ஒன்றுக்குப் பணியாளர் (பெண்) தேவை. (CS/51524 AH-1

**074 288 5023**

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

தெல்லிப்பளையில் உள்ள வீடொன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்ய பணிப்பெண் ஒருவர் தேவை.

**T.P.: 077 400 5023**

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிக நிலையத்துக்குப் பொதி செய்வதற்கும். Delivery செய்வதற்கும் வேலையாள்கள் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும். (CS/25781) AH-1

**077 419 5015**

**சிறுநீரகம் தேவை**

49 வயதுடைய O+ குருதி வகையை சேர்ந்த பெண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு O+ Group வகையை உடைய சிறுநீரகத்தை தானமாக வழங்கக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். (CS 51526) (N.1)

**072 806 6892**

**காணி விற்பனைக்கு**

- யாழ்ப்பாணம் **கல்வியங்காடு 21** பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. **நிலப்பரப்பு**
- புதிய செம்மணி வீதி.
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்.

**தொடர்புகளுக்கு:**
**076 788 0591**

(CS 25774B) A-1

**காணி விற்பனைக்கு**

- யாழ்ப்பாணம் புத்தூர் மெயின் றோட்டில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. **நிலப்பரப்பு**
- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து **1 km** தூரத்தில்.
- குடியிருப்பு சூழ உள்ள காணி
- நன்னீர் ஊற்று
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.

**தொடர்புகளுக்கு: 076 057 0354**
**076 826 0354**

(CS 25774) A-1


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 17 • 11 • 1962

மறைவு 03 • 08 • 2023

## நடனசிவம் தவலெட்சுமி

சரவணையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நடனசிவம் தவலெட்சுமி நேற்றுமுன்தினம் (03.08.2023) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - இலங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், நடனசிவத்தின் பாசமிகு மனைவியும், தனேஸ், சங்கர், கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அஜித், சுரேகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், புஸ்பராசா, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் கேதாரநாதன் (ஈசன்), காலஞ்சென்ற கணேசலிங்கம், லோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிர்மலாதேவி, பவானி, நாகதீஸ்வரி, அகிலேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், கிருசிகன், டஸ்வின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (CS/51528) AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

**077 638 9141, 077 462 6761, 077 871 5228**


# வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னாரில் இருக்கும் எமது நளின் நிறுவனத்தின் கிளைக்கான தொழில்நுட்பவியலாளர்களுக்கான வேலைவாய்ப்பு



- **Service Centre Technician**
  - யாழ்ப்பாணம் - 2 பேர்
  - கிளிநொச்சி - 1 பேர்
  - மன்னார் - 1 பேர்
- **Camera Technicians**
  - யாழ்ப்பாணம் - 4 பேர்
  - கிளிநொச்சி - 2 பேர்
  - மன்னார் - 2 பேர்

கணினிசார் அறிவு மற்றும் குறித்த துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (with Driving Licence)

தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ உங்கள் விண்ணப்பங்களை அனுப்புங்கள்.

மேலும் EPF, ETF வழங்கப்படும்.
தங்களது தகுதிக் கேற்ற வேதனம் வழங்கப்படும்.
தங்களது விண்ணப்பங்களை 11.08.2023 இற்கு முன்பு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தபால் மூலம்
194/2 பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

NALIN Information Technologies (Pvt) Ltd
Computers of the North

Email - info@nit.lk
Contact No - 021 222 1121
077 542 7426




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org